# முரசொலி

பக்கங்கள் ஆறு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 124 பிரசோற்பத்தி பங்குனி 17 (30.03.1992) திங்கள்


## நேற்றைய தேர்தலில் திருப்பம்

### யாழ் செஞ்சிலுவை பழைய நிர்வாகத்திடம்

நேற்றைய தினம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை பொதுக்கூட்டம் யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி பூபிலி மண்டபத்தில் மிகவும் பரபரப்பான சூழ் நிலையில் நடைபெற்றது புதிய யாப்பின்படி நடைபெற்ற இத் தேர்தலில் தலைவர். உப தலைவர் செயலாளர் பொருளாளர் பதவிகளுக்கு வேட்பு மனுக்களை சமர்ப்பித்திருந்த புதியவர்கள் முன்னைய வருடம் பதவிகளில் இருந்தவர்களை எதிர்த்து தாம் போட்டியிடவில்லை என்று போட்டியில் இருந்து வாபஸ் பெறும் கடிதங்களை தலைவருக்கு அனுப்பி தேர்தலில் 6 ஆம் பக்கம் பார்க்க

# இந்தியா அறிவுபூர்வமாக சிந்தித்து புலிகளுடன் நட்புறவை ஏற்படுத்தும்

## பி. பி. ஸியிடம் கலாநிதி பாலசிங்கம் நம்பிக்கை

புலிகளுடனான உறவை இந்தியா மீண்டும் ஏற்படுத்தும் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியதாக பி, பி. ஸி. நேற்றுத் தெரிவித்தது,

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியாவின் தற்போதைய கொள்கைகள் உணர்ச்சி வசப்பட்டவை எனக் குறிப்பிட்ட அன்ரன் பாலசிங்கம், இந்தியா எதிர்காலத்தில் அறிவு பூர்வமாக சிந்திக்கும் இதனால் புலிகளுடனான உறவை புதுப்பிக்கும் என நம்பிக்கை வெளியிட்டதாக பி. பி, ஸி. மேலும் தெரிவித்தது.

## வவுனியாவில் 3 காவலரண்கள் தாக்கி அழிக்கப்பட்டது

வவுனியா நேரியகுளத்தில் நேற்று அதிகாலை 12 20 மணிக்கு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் மூன்று காவலரண்கள் முற்றாக அழிக்கப்பட்டன. ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

இத் தாக்குதலின் போது இராணுவ இழப்புப் பற்றிய சேதவிவரங்கள் எதுவும் இது வரை தெரியவரவில்லை.

மீட்கப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

- ☐ ஏ. கே, ரம் மகசீன் - 4
- ☐ ரி 56 மகசீன் - 2
- ☐ ஜே. ஆர், கைக்குண்டு - 4
- ☐ ஐ. எம், ரவை லிங்குடன் - 355
- ☐ ஐ. எம், ரவைகள் - 575
- ☐ ஏ. கே, கோல்சர் - 1
- ☐ கிற்பாக் - 5
- ☐ சப்பாத்து - 5 சோடி
- ☐ மில்ரி பெல்ட் - 4

(08)

★ இன்று மீண்டும் எல்லை கடக்கும் படலம்

## தனித்தனியாக எல்லை கடக்க ஜே. கே. எல். எப். திட்டம்

இந்திய - பாகிஸ்தான் எல்லையை இன்று மீண்டும் கடக்கத் திட்டமிட்டுள்ள ஜம்மு கஷ்மீர் விடுதலை முன்னணியினர் இம்முறை பேரணியாகச் செல்வதை தவிர்க்கவுள்ளனர்.

இவர்கள் தனித்தனியாக எல்லையை கடக்கத் திட்டமிட்டுள்ளனர். இதே சமயம் இவர்களுக்கு ஆதரவாக இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரில் இருந்து எல்லை நோக்கி செல்லவிருந்த பேரணி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அறிவித்துள்ளார்.

எனினும் பாகிஸ்தானிலிருந்து பேரணி தொடர்ந்து வருவதாக அறிந்தால் ஒத்திவைக்கப்பட்ட தமது பேரணி மீண்டும் ஆரம்பமாகும் என அவர் கூறினார்.

★ அமைச்சர் ரணிலிடம் சவான்

## அகதிமுகாம் அருகே உள்ள படைகளை அகற்ற கோரிக்கை

இந்தியாவிலிருந்து திரும்பும் இலங்கை அகதிகள் தங்கியுள்ள அகதிமுகாம்களின் அருகிலுள்ள ஸ்ரீலங்காப் படைகளை அப்புறப்படுத்துமாறு இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

புதுடில்லியில் தம்மைச்சந்தித்த அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்திய உள்துறையமைச்சர் எஸ். பி சவான் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்

இந்தியா பாதுகாப்பற்ற சூழ்நிலையில் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதாக சர்வதேச அகதிகள் நலன் அமைப்புகள் குற்றஞ்சாட்டிவருவது தெரிந்ததே,

## வவுனியா அகதி முகாமிலிருந்து இளைஞர் இழுத்துசெல்லப்பட்டனர்

வவுனியா அகதிமுகாமில் வைத்து தமிழ்க்குழுவொன்றினால் இராணுவ உதவியுடன் தமிழகத்திலிருந்து அகதியாக வந்த வாலிபர்கள் சிலர் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவர்களின் குடும்பத்தவர்கள் கதறிக்கதறி தடுத்தும் எவ்வித காரணமும் இன்றி அழைத்து சென்றுள்ளார்கள்

ஒரு வாரமாகியும் அவர்கள் பற்றியவிவரம் எதுவும்கிடைக்காததால் மேற்படி வாலிபர்களின் உறவினர்கள் பெரும் வேதனையுடன் இருப்பதாக வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார் சோலை அகதி முகாமிலும் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது 09

★ நாடுதிரும்பிய பாக் அணி

## ரசிகர்களை அவமதித்ததால் விமான நிலையக் குழப்பம்

5ஆவது உலகக் கோப்பை கிரிக்கெட் சாம்பியன்களான பாகிஸ்தான் அணி நேற்று நாடு திரும்பியது

இவர்களை வரவேற்க விமானநிலையத்தில் மக்கள் திரண்டிருந்ததாகவும் எனினும் இவர்களை அணிக்கப்டன் இம்ரான்கான் கண்டுகொள்ளவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது

இதனால் ஆத்திரமடைந்த கூட்டம் ஒன்று அருகிலுள்ள கட்டிடங்களை அடித்து நொருக்கியது பொலிஸார் தடியடி பிரயோகம் செய்ய வேண்டியதாயிற்று.

## அலங்கார விளக்குகளை நிறுத்த ஜனாதிபதி பணிப்பு

அரச அலுவலகங்கள், தனியார் அலுவலகங்கள், ஜனாதிபதி மாளிகை, பிரதமர்மாளிகை ஆகிய கட்டிடங்களுக்கு வெளியே பொருத்தப்பட்டுள்ள அலங்கார விளக்குகளை நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடும் வறட்சியினால மின் உற்பத்தி நீர்நிலைகள் வற்றியுள்ளதால் மின்சாரத்தை சேமிக்கவே இப்புதிய நடைமுறை எனச்சுட்டிக்காட்டப்படுகிறது

## 5 இலங்கைத் தமிழர்கள் சென்னையில் கைது

தகுந்த பயண ஆவணங்களின்றி இருந்த 5 இலங்கைத் தமிழர்கள் நேற்று முன் தினமிரவு சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இருவர் கே, கே நகரிலும் மூவர் சைதாப்பேட்டையிலும் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் புலிகளுடன் தொடர்புடையவர்களா என விசாரணை நடப்பதாகவும் தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

## 7 தமிழ் இளைஞர்கள் தமிழ்க் குழுவினால் கைது

மட்டக்களப்பில 7 தமிழ் இளைஞர்கள் தமிழ்க் குழுவொன்றினால கைதுசெய்யப்பட்டுள்ளனர்

மண்டூர், பாலையடிவெட்டை இராணுவமுகாம் படையினருடன் வந்த இக்குழுவினர் இரு கிராமங்களை சுற்றிவளைத்து 7 தமிழ் இளைஞர்களை கைது செய்து கொண்டு சென்றனர்.

## பஞ்சாப் மாநிலத்துக்கு சலுகை வழங்கப்படுமென அறிவிப்பு

பஞ்சாப் மாநிலத்துக்கு அரசியல் சலுகைகள் வழங்கப்படும் என்று இந்திய உள்துறை அமைச்சர் சவான் அறிவித்துள்ளார்.

சலுகைகளைப் பற்றிய தகவல் எதுவும் அவர் குறிப்பிடவில்லை,

சீக்கியர்களின் கோரிக்கைக்கு இணங்க சண்டிகார் நகரம் பஞ்சாப்புக்குத் தலைநகராகத் தரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என பி. பி. ஸி நிருபர் கூறுகிறார்.

## 12 நிலையங்களில் வடமராட்சியில் பரீட்சை

வடமராட்சிக் கல்விக்கோட்டப் பகுதிகளில் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகும் இப் பரீட்சை இப்பிராந்தியத்தில 12 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதாக கலவித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 08

# பிறந்த 17 ஆவது நாள் இருதய மாற்றுச் சிகிச்சை

கலிபோர்னியாவின்லஸ்ச பேசர்ட் நகரில் லூசிலி பாக்கா ரீட் சிறுவர் மருத்துவ மனையில் இந்த சத்திர சிகிச்சை நடைபெற்றது

இருதய மாற்று சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப் பட்ட மிகவும் வயதில் குறைந்த குழந்தை ஜாக்குலின்றீட் பிறந்த 17 நாள்களில் இக்குழந்தைக்கு மாற்று இருதய சிகிச்சை நடைபெற்றுள்ளது

ஜாக்குலின் பிறக்கும்போது இடது பக்கநுரையீரல் வளர்ச்சியடையவில்லை வலதுபக்க நுரையீரல் உருவாகியிருக்கவில்லை எனவே டாக்டர் ஆறு வாரக்குழந்தையின் நுரையீரலைக் இக்குழந்தைக்குப் பொருத்தி வாழ வைத்துள்ளார்

ஜாக்குலின் இடது பக்க நுரையீரலுடன் புதிய நுரையீரல் பொருத்தப்பட்டு வளர்ச்சி அடைந்து வருகிறது

# திருமணச்சான்றிதழ் பெறுவதும் தாமதம்

யாழ் செயலக பதிவுக்கந்தோரில் திருமணச்சான்றிதழுக்கு விண்ணப்பித்தவர்களும் தமது திருமணச் சான்றிதழ் பிரதிகளைப் பெறுவதற்கு மாதக்கணக்காகக் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இப்பதிவுக்கந்தோரில் பிறப்புச்சான்றிதழுக்கு விண்ணப்பித்த பல ஆயிரக்கணக்கானோருக்கு இரு வருடங்களுக்கு மேலாகியும் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படாதிருக்கும் அவலநிலை பற்றி 'முரசொலி' பிரத்தியேக செய்திகள் வெளியிட்டுவருவது தெரிந்ததே.

பிறப்புச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்தவர்கள் மட்டுமல்லாது பல அவசர தேவைகளுக்கென திருமணச் சான்றிதழுக்கு விண்ணப்பித்தவர்களும் யாழ். செயலகத்திற்கு தினமும் அலைந்து வருவது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 14

# இரு மாதங்களின் பின்னர் நெடுந்தீவிலிருந்து கடிதங்கள்

நெடுந்தீவுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே இரு மாத காலமாகத் தொடர்பற்றிருந்த பின்னர் அங்கிருந்து கடிதங்கள் வந்து சேர்ந்துள்ளன.

இருமாதங்களுக்கு முன்னர் நெடுந்தீவில் உள்ளவர்களால் யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது உறவினர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் இவ்வாரமே யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளன அக்கடிதங்களில் நெடுந்தீவில் தாம் அனுபவித்து வரும் கஷ்டங்கள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. 14


## சுன்னாகம் பலநோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்.

## பதவி வெற்றிடம்

பின்வரும் இலிகிதர் பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் ஆண் பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலிகிதர் பதவி கு. இ. 302 : 14

சம்பளத் திட்டம்;- 700 - 950

15 10, 20 5

இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை;- க. பொ. த (சாதாரண) தரத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம், தமிழ் பாசை என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தி.

வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 15 04, 92

பொது:-

1) பின்வரும் சான்றிதழ்களின் உண்மைப்பிரதி விண்ணப்பத்துடன் தவறாது இணைக்கப்படல் வேண்டும். இவற்றின் மூலப்பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
அ) கல்வி ஆ) பிறப்பு இ) வதிவிடத் தகைமை ஈ) அண்மையில்பெற்ற இரு நற்சான்றிதழ்கள்.

2) விண்ணப்பங்கள் யாவும் 15. 4 92 அன்று பிற்பகல் 4 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பொதுமுகாமையாளர் சுன்னாகம் பல நோ. கூ. சங்கம். என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

3) சங்கத் தொழிற்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4) விண்ணப்ப படிவங்களை ரூ. 5/- செலுத்தி வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
28. 03. 92 03061


★ புதிய அவசரகால சட்டம் அமுலானது

# காடழிப்பில் தொடர்பிருந்தால் அரச ஊழியருக்கு கடும் தண்டனை

காட்டு மரங்களை சட்ட விரோதமாக தறிக்கப்படுவதை தடுக்கும் முகமாக அவசரகால சட்டங்கள் நேற்று ஜனாதிபதி பிரேமதாஸவினால் பிரகடனப் படுத்தப்பட்டன.

இப்புதிய பிரகடனத்தின் படி சட்டவிரோதமாக மரங்களை தறித்து குற்றவாளியாக காணப்படும் ஒருவருக்கு 2 முதல் 10 வருடங்களுக்கான சிறைத் தண்டனை கிடைக்கும் எனவும், 1 லட்சம் முதல் 5 லட்சம் ரூபா வரையிலான அபராதம் விதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டவிரோத செயலில் பங்குபற்றியதாக அரச ஊழியர் ஒருவரோ அல்லது பாதுகாப்புப் படையினரோ அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கு கடும் தண்டனை விதிக்கப்படும்.

இதே வேளை காடு அழிப்பை தடுப்பதற்காக வன அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## "நிலா நிலா ஓடி வா"

நிலா கொஞ்சம் கொஞ்சமாக பூமியை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது என்கிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள். 200 வருடங்களுக்கு முன் நிலா பூமியிலிருந்து 4,04, 350 கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்தது இப்போது 4,02,750 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது என்கிறார்கள் நிலா நிலா ஓடிவா' உண்மையாகி வருகிறது

## தோல் பதனிடல் முயற்சி

தமிழீழ ஆய்வு நிறுவனம் தோல் பதனிடல் கைத்தொழில் முயற்சியில் ஈடுபடவுள்ளது. நாவற்குழிப் பகுதியில் இம் முயற்சியை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு. அதற்கான ஆரம்பவேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

மாட்டுத் தோல் பதனிடல் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து தோல் பதனிடல் கைத்தொழிலை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. தோல் பதனிடலுக்குத் தேவையான ஆவரசம் பட்டைகள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## அல்சரை குணமாக்க வாழைப்பழம்

'அல்சர்' நோயைக் குணப்படுத்தும் அபூர்வ சக்தி வாழைப்பழத்திற்கு இருக்கிறது என்றுமருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். குடல்களில் சேரும் அமிலங்களோ அல்லது நச்சுப் பொருள்களோ அவற்றை அரித்து விடுவதாலேயே 'அல்சர்' எனப்படும் குடல் புண் நோய் உண்டாகிறது வாழைப் பழத்திலுள்ள விசேட சத்துப் பொருள் குடல்களில் பழுதுபட்ட சவ்வுத் தோல்களை விரைவில் வளரச் செய்து புண்ணை ஆற்றி விடுகிறது என்கிறார்கள் வெளிநாட்டு மருத்துவ நிபுணர்கள்.

## சுயதொழில் ஊக்குவிப்பு

யாழ். மாவட்டத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றைச் சுயதொழில் முயற்சியாக மேற்கொள்பவர்களுக்கு ஊக்கமளித்து உதவுவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது

தேனீ வளர்ப்புத்துறையிலும் விவசாயத் திணைக்களம் அதிக ஆர்வம் காட்டி வருகின்றது. தேனீ வளர்ப்பில் ஈடுபட விரும்புபவர்களும் பொது ஸ்தாபனங்களும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். 14

# ஆசிரிய கருத்தரங்கு 67லட்சம் ரூபாசெலவு

கொழும்பில் ஆசிரியர்களின் கருத்தரங்குகளை நடாத்தியதில் கடந்த வருடம் மட்டும் 67 லட்சம் ரூபா செலவாகியுள்ளது, என கல்விச்சேவைகள் அமைச்சர் ரேணுகா ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதில் இருபத்தையாயிரம் ஆசிரியர்கள் பங்குபற்றியதாகவும் அவர் சொன்னார். 47

# அமரர் வணசிங்கா நினைவுப் பேருரை நாளை நடைபெறும்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னை நாள் தலைவர் அமரர் டி. எம். ஏ. வணசிங்கா அவர்களின் நினைவுப் பேருரை நாளை செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரி மண்டபத்தில் சங்கப் பொதுச் செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது

யாழ் பல்கலைக்கழக விலங்கியற்துறைத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் அவர்கள் 'போரிக்காலமும் சூழல் பாதுகாப்பும்' என்ற விடயம் தொடர்பாக நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

மருதனார்மடம் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு இரா சிவானந்தன் அமரரின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

யாழ் பல்கலைக் கழக மூத்த விரிவுரையாளர்களில் ஒருவரான திரு. க. சின்னத்தம்பி தொடக்கவுரை நிகழ்த்தவுள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்

# வட்டு. யாழ்ப்பாணக் கலலூரி கேடயத்தை சுவீகரித்தது

'பொன் அணிகள் 2 ஆம் போர்' என்று அழைக்கப்படும் "ராஜன் கதிர்காமர்" வெற்றிக் கேடயத்திற்கான 6 ஆவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்றபோது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி "ராஜன் கதிர்காமர்" வெற்றிக் கேடயத்தை பெற்றுக் கொண்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 48. 8 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. 18

# எந்திரவியலுக்கான சிறப்பு பயிற்சி விண்ணப்பம் கோரல்

கட்டுநாயக்காவிலுள்ள தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நிலையத்திற்கு எந்திரவியலுக்கான சிறப்புத் தொழிற்பயிலுனர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் தேசிய தொழிற்பயிலுனர், கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை இதற்கான விண்ணப்பங்களைக்கோரியுள்ளது

நான்கு வருடப் பயிற்சி நெறியில் சித்தியடைபவர்களுக்கு எந்திரவியல் விஞ்ஞானத்திற்கான டிப்ளோமா வழங்கப்படும் என்றும் இப்பயிற்சி நெறி குடிசார் எந்திரவியல் மின் எந்திரவியல் பொறிமுறை எந்திரவியல் ஆகிய மூன்று துறைகளைக் கொண்டிருக்குமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மொழி மூலமான இப் பயிற்சிக்கு 18 - 25 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் இம் மாதம் 31 ஆம் திகதி இப்பயிற்சிக்கான விண்ணப்ப முடிவு திகதியாகும். 14

● கப்பல்கள் மூலம்

# மருந்துகள் வருவதை பொறுத்திருந்துபார்க்கலாம்

யாழ்ப்பாணப்பகுதி ஆஸ்பத்திரிகளுக்கு துரிதமாக மருந்துகள் அனுப்பப்படும் என சுகாதாரப் பகுதி அண்மையில் அறிவித்தும் தொடர்ந்தும் குறைவான மருந்துகளையே அனுப்பி வருவதாக சுகாதாரப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் கப்பல்களில் அரச உறுதியளித்தபடி மருந்துகள் வருமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

விமான மூலம் மருந்துகளைக் கொண்டுவந்தால் அவற்றை யாழ்ப்பாணம் கொண்டுவருவதில் பல சிரமங்கள் இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

வரும் கப்பல்களில் அதிகமாக மருந்துகள் அனுப்பப்பட்டால் ஓரளவு தட்டுப்பாட்டை நீக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 47

நல்லூர் கிளை நூலகம்
மாநகரசபை மன்றம்
யாழ்ப்பாணம்



## மூத்தமிழ்க் காவலரையும் கவர்ந்த 'கலைஞரின் குறளோவியம்' ஹிந்தியிலும் வெளியானது

கலைஞரின் குறளோவியத்தை ஹிந்தியில் மொழி பெயர்க்கத்தான் என் அப்பா கூட விரும்பினார் என்கிறார் மூத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதத்தின் மகள் மணிமேகலை ஆனால் இந்நூல் வெளியீட்டைத் தமிழ் நாட்டில் நடத்த முடியவில்லை இங்கிருப்பவர்களுக்கு அரசியலையும், இலக்கியத்தையும் பிரித்துப்பார்க்கத் தெரியவில்லையே என்று மனம் வெதும்புகிறார் அவர்.

கலைஞர் மு கருணாநிதியின் படைப்பான 'குறளோவியம்' ஹிந்தியில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது (1989 இல் கே செல்லப்பன் என்பவர் இதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்) இப்போது ஹிந்தியில் மொழி பெயர்த்திருப்பவர் டி. என். கே. கண்ணன் ஆங்கிலம், ஹிந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளில் எம். ஏ. பட்டம் பெற்றிருக்கும் கண்ணன் மூத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதத்தின் மருமகன்.

குறளோவியம் ஹிந்தி நூல் வெளியீட்டுவிழா பீஹாரில் பீஹார்முதலமைச்சர் லல்லு பிரசாத் யாதவ் தலைமையில் நடைபெற்றது.

கி. ஆ. பெயின் மகள் மணிமேகலை தன் கணவரின் இவ்வாக்கம் பற்றி தெரிவிப்பதாவது ''வட மாநிலத்தில் படித்ததால் ஹிந்தியே அவர் பாடமொழியாகி விட்டது எங்கள் இருவருக்கும் திருமணம் நடக்கும் வரை என் கணவருக்கு அரைகுறையாக மாத்திரமே தமிழ் பேசத் தெரியும், கி. ஆ. பெ. யின் மருமகனாக இருந்து கொண்டு தமிழ் படிக்கத் தெரியாமல் இருந்தால் எப்படி? ஆனால் திருமணத்துக்குப் பிறகுதான் நான் அவருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தேன்.

என் கணவர் தமிழக அரசின் மின் வாரியத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாக இருந்தவர், கி. ஆ. பெ. யின் மருமகன் என்பதால் அதிகாரிகள் கொடுத்த சங்கடங்கள் பல இதனால் முன் கூட்டியேவேலையிலிருந்து ஓய்வுபெற விரும்பி... அப்படியே செய்யவும்செய்தார்

இந்தச்சமயத்தில் இங்கிருந்த படியே தமிழ்நாட்டுச் சம பலன்களை பற்றியெல்லாம் ஹிந்திதினசரிகள் மற்றும் வாரப் பத்திரிகைகளுக்கு எழுதி வந்தார்.

இந்த அனுபவத்தோடு என் அப்பாவின் ஆலோசனையும் சேர... ஏதாவது தமிழ் இலக்கியம் ஒன்றைத் தமிழில் மொழி பெயர்க்க முடிவெடுத்தார்,

அப்பா முதற்கொண்டு என் வீட்டார் அனைவரும் குறளோவியத்துக்குத்தான் வாக்களித்தார்கள். குறளை முன் வைத்து நீதிக்கதைகள் சொல்லியிருக்கும் கலைஞரின் பாணி, என் கணவரை வெகுவாகக் கவர்ந்து விட்டது. குறளோவியத்தைத் தேர்ந்தெடுத்தபின் கலைஞரைச் சந்தித்து ஒப்புதல் வாங்கினோம். கலைஞர் எனக்கு ஹிந்தி தெரியாது ஆனால் நீங்கள் செய்வதானால் தாராளமாகச் செய்யுங்கள் என்றார்

நூல் ஹிந்தியில் 'குறள் ஆலேக்கன்'ஆக வடிவம் பெற்ற பிறகு, தனக்குத் தெரிந்த ஹிந்தி அறிஞர்களை வைத்து நூல் பற்றித் தெரிந்து கொண்டார் நல்ல பணி செய்திருப்பதாக எங்களை மனம் திறந்து பாராட்டினார்

நூலைப் படித்து விட்டும் பாராட்டியவர்களில் துணை ஜனாதிபதி சங்கர் தயாள சர்மா கவர்னர் பீஷ்மன் நாராயணசிங் ஆகியோர் முக்கியமானவர்கள் புத்தகத்தில் 'சங்கர் தயாள சர்மாவின் வாழ்த்துச் செய்தியும் இடம் பெற்றுள்ளது.

புதுடில்லி புத்தகக் கண்காட்சியிலும் நூல் இடம்பெற்றது.

இன்னும் சொல்லப் போனால் இந்த நூல் தமிழ் நாட்டிலிருந்து தான் வெளிவர வேண்டும் என்று விரும்பினோம் அதற்கான முயற்சியும் செய்தோம் சில பல அரசியல் சூழ்நிலை காரணமாக இங்கே வெளியிட முடியவில்லை. இங்கிருப்பவர்களுக்கு அரசியலையும் இலக்கியத்தையும் பிரித்துப் பார்க்கத் தெரியவில்லையே

குறளோவியத்தை மொழி பெயர்ப்பதற்கு அவருக்குப் பத்து மாதகாலம் ஆனது,

இது தவிர தமிழ்நாட்டின் மிகச் சிறந்த முப்பது எழுத்தாளர்களின் சிறுகதைகளை அவர் ஹிந்தியில் மொழி பெயர்த்திருக்கிறார்,

இது சாகித்திய அகடமியின் மொழி பெயர்ப்பு இலக்கிய விருதுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது

## பாஸ்போட் மோசடி பொலிஸ் அதிகாரி சாட்சியம்

அண்மையில் கனடாவில் கைதான இரு இலங்கைத் தமிழர் நடத்தியதாகக் கூறப்படும்பாஸ்போட் மற்றும்பயண ஆவண மோசடி குறித்து நீதிமன்றத்தில் சாட்சியமளித்த கனேடியப் பொலிஸ் அதிகாரி கேஸ் பேரப், 'பாஸ்போட் ஒன்றுக்கு பதினையாயிரம் அமெரிக்கடாலர்கள் வரை சந்தேக நபர்கள் அற விட்டதாகத் தெரிவித்தார்.

இந்தச் செய்தியை 'சண்டே ரைம்ஸ்' நேற்று வெளியிட்டுள்ளது.

சாந்தகுமார் குமாரசாமி லோகநாதன் சபாநாயகம் என்ற இரு சந்தேக நபர்களும் அதிகளாக கனடாவுக்குள் கனேடியப் பாஸ்போர்ட் மூலம் நுழைந்து எவ்வாறு இலங்கையரை அங்கு வரவழைத்தார்கள் என்ற மோசடி வெளியாகியுள்ளது என்றும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கோரிக்கை

வணக்கத் தலங்களைத் திருத்தியமைக்க நிதி தேவை என்று வவுனியாவில் நடைபெற்ற இந்துசமய கலாசார அமைச்சின் நடமாடும் சேவையின்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

### சென்னையில்...

விபுலானந்த அடிகள் நூற்றாண்டு விழா இன்று சென்னையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது,

## வவுனியாத் தொலைபேசி சேவைகள் விஸ்தரிப்பு!

வவுனியா தொலைபேசி வசதிகளை விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதற்காக ஏஜென்ஸித் தபால் நிலையங்கள் அமைப்பதற்கு 30க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவிலிருந்து கொழும்புக்கும்வெளிநாடுகளுக்குமான தொலைபேசி வசதிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன கடந்த வெள்ளிக்கிழமை முதல் 12 லையின்களாகத் தொலைபேசிச் சேவை அதிகரிக்கப்பட்டுள்ளன முன்னர் 3 லையின்களே இருந்தன.

தபால், தந்தி, தொலைத் தொடர்பு அமைச்சின் நடமாடும் சேவையில் அமைச்சின் உயரதிகாரி ஒருவர் இவ்வாறு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

### தபால் சேவை

தற்போது தபால் பொதிகள் வாவும் கொழும்பிலிருந்தும், வவுனியாவிலிருந்தும் பகல் ரயில்களிலேயே அனுப்பப்படுகின்றன ஒரு வாரத்தில் அவற்றை இரவு தபால் ரயிலில் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

★ எதிரணி பற்றி ஜனாதிபதி

## பிராயச்சித்தம் பெறவே கதிர்காமத்துக்கு யாத்திரை

கார்ல்மார்க்ஸைப் பின்பற்றியவர்கள் இன்று கதிர்காமம் யாத்திரை மேற்கொள்கிறார்கள் என்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா கூறியுள்ளார்.

''கடவுளையும் சமயத்தையும் நிந்தித்தவர்கள், இப்போது தமது தவறை உணர்ந்துள்ளனர் இவ்வாறு செயற்பட்டவர்கள் கொளுத்தும் வெயிலில் மைல்கணக்கில் நடந்து சென்று பிராயச்சித்தம் செய்கிறார்கள் கார்ல் மார்க்ஸில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் இப்போது தமது ஈடேற்றத்துக்குக் கதிர்காமத் தெய்வத்தை நாடுவது, மகிழ்ச்சி தருகிறது.

கதிர்காமத் தெய்வத்திடம் மன்னிப்புக் கேட்பதற்கு இந்த வழியை அவர்கள் நாடுகிறார்கள் போலும்''

மேற்கண்டவாறு அவர் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார்.

## புத்தாண்டில் வடக்கிலிருக்க விருப்பம் - பௌத்த குழு

புத்தாண்டன்று தாம் வடக்கில் தங்கியிருப்பதற்கும் பௌத்த பிக்குகள் குழு விருப்பம் தெரிவித்துள்ளதாக நேற்றுக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன,

தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பை உறுதி செய்ய வேண்டியே வருகையில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறின.

'சமாதானத்தையே விரும்புகிறோம் ஆனால் நாம் விடுதலைப் புலிகளுடன் பேச யாழ்ப்பாணம் செல்கிறோம் சண்டையை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்பதே எம்நோக்கம்என இக்குழுவில் இடம் பெறவுள்ள பிக்கு ஒருவர் கூறியதாகவும் இச்செய்திகள் தெரிவித்தன.

## 'ஜெ' ஆட்சியின் சில நிகழ்வுகள்

ஜெயலலிதா ஆட்சியின் தொடர் நிகழ்வுகள் சில பற்றித் தமிழகச் செய்திகள் தெரிவித்துள்ள தகவல்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

சட்டமன்றத்துக்குள் உறுப்பினர்கள் நுழையும் வழியில் மெட்டல் டிடெக்டர் சோதனை: உறுப்பினர்களுக்கே இக்கதி.

### எழாத பண்ருட்டி

சபைக்குள் முதலமைச்சர் நுழைந்ததும் எல்லோரும் எழுந்து மரியாதை செய்வது மரபு அன்று... அவர் நுழைந்த போது ஏதோ காரணத்தால் பண்ருட்டி ராமச்சந்திரன் எழாமல் அமர்ந்திருந்தார். இதனைப் பார்த்த அமைச்சர் மதுசூதனன் அவரைப்பார்த்து ஏதோ கடுமையாகப் பேசியது தெரிந்தது. ஆனால் பண்ருட்டி அப்போது அமைதியாக இருந்தார்

### அந்தநாள் அச்சம்

தி. மு. க உறுப்பினர் பரிதி இளம் வழுதி சபைக்கு சஃபாரி குட்டில வந்திருந்தார். 'என்ன இது... புது டிரஸ் அண்ணாச்சி என்று கேட்ட போது, ஒருமுறை அவரது வேட்டியை உருவி எடுத்ததை மனதில வைத்துக்கொண்டு எல்லாம் பாதுகாப்புக் கருதித்தான் என்று சிரித்தபடி சொன்னார்.

### குங்குமம் சுமந்த கழுதை

மத்திய அரசை அ. தி. மு. க. வினர் பேசினார்கள் அப்போதெல்லாம் குங்குமம் சுமக்கும் கழுதைகளாக இருப்போம் என்று பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் 'குங்குமத்தைப் போட்டுவிட்டு ஓடி விட்டது தொடக்கத்திலேயே நன்றாகத் தெரிந்தது.எந்தக் காங்கிரஸ்காரரும் முதலெழும்போது பதில் சொல்ல முன்வரவில்லை.

### பழக்க தோஷம்

சபைக்குள் முதலமைச்சர் நுழைந்தபோது சபைச் சார்ஜன்ட் மாண்புமிகு முதலவர் அவர்கள் என்று அவரது வருகையைச் சபைக்குத் தெரிவிக்கையில பழக்கதோஷத்தில அ தி. மு க உறுப்பினர் ஒருவர் வாழ்க எனக் கோஷமிட்டார்.

### சசிகலா

சபைக்கு முதலமைச்சருடன் வந்த அவரது தோழி சசிகலா துணை சபாநாயகரின் இருக்கையில அமர்ந்தார்.

## பொன்முடிக்கு கலைஞரின் ஒரு தட்டு

கோடிக்கணக்கில் செலவு செய்து அரசுத் துறையில் முதல்வர் ஜெயலலிதாவின் விழுப்புரம் வருகையை ஒரு மாபெரும் மாநாடாக சமீபத்தில் நடத்தியிருந்தால் தி மு. க வினரும் கலைஞர் மு. கருணாநிதி பங்கேற்ற ஒரு நிகழ்ச்சியை மாபெரும் வகையில் நடத்தியுள்ளனர்.

மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்த தி. மு. க தேர்ந்தெடுத்தது.

'தடா' பற்றி அருமையாக விமர்சித்த கலைஞர் பிரமாண்டமாக ஏற்பாடு செய்த முன்னாள் அமைச்சர் பொன்முடியை மேடையிலேயே பரிசாகத் தட்டிக் கொண்டார்.

## பிறந்து 29 நாள்களில் இளவரசன்

பால பருவத்திலேயே இளவரசராக முடி சூட்டப்பட்டவர் இளவரசன் அல்பேப் எட்வேட் இவர் வேல்ஸ் நாட்டின் இளவரசராக 1841 ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி முடி சூட்டப்பட்டார் அப்போது அவருக்கு வயது என்ன தெரியுமா? பிறந்து 29 நாள்களே.

## மூவர் தெரிவு

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கிடையே மாவட்ட மட்டத்தில நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வேலணைக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த செல்வி ம. ஜெயந்தி (ஆசிரியை யா/ வேலணை சைவப்பிரகாச வித்) செல்வி அ. ஆதிரை (யா/ வேலணை சைவபிரகாச வித்) திருமதி அ. இராசலிங்கம் (ஆசிரியை யா/ மண்டைதீவு மகாவித்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (15)

## கோர விபத்து

மேற்கு வங்காளத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த கோர விபத்தொன்றில் 12 பேர் மடிந்தனர், 20 பேர் காயமுற்றனர்.

# தென்னாபிரிக்காவில் மீண்டும் வன்முறை, அறுவர் கொலை !

தென்னாபிரிக்காவில் தற்போது காணப்படும் வன்முறை நிலையில் சுயேச்சையான, நியாயமான தேர்தல்கள் நடத்துவது அசாத்தியமாக இருக்கும் என்று சர்வதேச நீதி நிபுணர்கள் கமிட்டி கூறியுள்ளது.

வெள்ளையரல்லாதோர் வாழும் நகரங்களில் அமைதியை நிலைநாட்ட பெரும் முயற்சி மேற்கொள்ளுமாறு அரசியல் கட்சிகளையும் அது வற்புறுத்தியுள்ளது.

இது இவ்வாறு இருக்க தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர் ஆறு பேர் அரசியல் வன்முறையில் கொல்லப்பட்டனர்.

இவர்களில் நால்வர் ஜொஹனஸ்பேக், அலைக்ஸான் நகரிலும் மற்றும் இருவர் வேறு பகுதிகளிலும் கொல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்;

சமீபத்திய கருத்துக் கணிப்பின் பின் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க அசம்பாவிதம் இதுவெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## நெடுந்தீவில் தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம்

நெடுந்தீவில் கடமையாற்றும் இரு தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் திருகோணமலையிலும், வவுனியாவிலும் கடமையாற்றும் முப்பது ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு கல்வித் திணைக்களம் மூலம் தெரிய வந்துள்ளது.

அதேசமயம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர மாக்க கல்வி அமைச்சு இழுத்தடிப்பதாகவும் தெரிக்கப் படுகிறது. யாழ், மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் சுமார் 600 பேரின் பட்டியல் யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளரால் கல்வி அமைச்சுக்கு உறுதி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ள போதிலும் இவர்களைப் பற்றிப் பாடசாலைகளிலும் பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளிடமும் நன்கு விசாரணை செய்யுமாறு யாழ். கல்வித் திணைக்களம் பணிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (15)

## பலாலி முகாமில் மரக்கறி செய்கையில் ஜே.வி.பியினர்

ஜே. வி. பி. தொடர்புடைய 50 இளைஞர்களுக்கு அவர்களது நடவடிக்கைகளை நன்கு அவதானித்த பின்னர் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களில் 16 பேர் பலாலி முகாமில் படைவீரர்களுக்கான மரக்கறிச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கெய்ரோவில் அரபுலீக் தலைவர்கள் ஆலோசனை

அரபுலீக் தலைவர்கள் முன்னர் திட்டமிட்டபடி எகிப்திய தலைநகர் கெய்ரோவில் கூடியதாக நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

1988 இல் நிகழ்ந்த விமானக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக இரு லிபியர்களை ஒப்படைக்குமாறு மேற்கு நாடுகள் விடுத்த கோரிக்கைக்கு லிபியா விலக்கிடம் பற்றி நடவடிக்கையை அரபுலீக் தலைவர்கள் விவாதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர் யாழ். வர தவிப்பு

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட நெடுந்தீவுப் பாடசாலைகளில் தற்போது கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அங்கிருந்து போக்குவரத்துச் சேவை நடைபெறாததால் தமது பயிற்சியை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் அடுத்த கப்பலில் தான் யாழ் நகர் வரலாம் என இருந்ததாகவும் தொடர்ந்து கப்பல் நெடுந்தீவு செல்லாத காரணத்தால் இப்பிரச்சினை உருவாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (15)

## உயிரியல் வாயு கூடங்கள்

எரிபொருள், மின் விநியோகம் எதுவுமற்ற நிலையில் சக்தி வளத்திற்கான ஒரு மாற்றீடாகப் பயன்படும் உயிரியல் வாயுவினைப் பெறுவதற்கான உயிரியல் வாயு கூடங்களைத் தமிழீழ ஆய்வு நிறுவனம் செம்மணை, அளம்பில், விசுவமடு, கந்தபுரம், வன்னேரிக்குளம், இராஞ்சி, கந்திமைமடு, வட்டக்கச்சி, புதுக்குடியிருப்பு, சண்டிலிப்பாய், கோப்பாய், திருநெல்வேலி, கிளிநொச்சி விவசாய பீடம் ஆகிய இடங்களில் அமைத்துள்ளது.

## மஞ்சள் இல்லம் வென்றது

பொலிகண்டி அ.மி.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. க. இராசதுரை தலைமையில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராக வல்வெட்டித்துறை கொத்தணி அதிபர் திரு. கோ. செல்வவிநாயகம் கலந்து கொண்டார். போட்டி நிகழ்ச்சிகளை பாடசாலை ஆசிரியர்கள் செல்விகள் இ. செனி, க. உமா இ. யோகலட்சுமி ஆகியோர் நெறிப்படுத்தினார்கள், பாடசாலை உப அதிபர் திரு. க. ஜெயச்சந்திரன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## மெய்வல்லுநர் போட்டி

ஊரெழு இ.கி.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டியை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி ஆரம்பித்து வைத்தார். பிரதம அதிதியாகக் கல்விப் பணிப்பாளர் கலந்து கொண்டார். அதிபர் திரு. இ. குலசிங்கம் தலைமை வகித்தார்.

## இறக்கம் கள்ளில் ஏற்றம் கருவாட்டில்

நெடுந்தீவில் ஒரு போத்தல் கள் ஐந்து ரூபாவாகவும், அதேவேளை ஒரு கிலோ கட்டாமீன் கருவாடு முப்பது ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல் செய்திகள் தெரிவிக்கின்றன. (15)

## உத்தமன் கோபம் ஒரு கணமே

சமீபத்தில் தமிழகத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் நிகழ்த்திய சமயச் சொற்பொழிவிலிருந்து ஒரு பகுதி இங்கு தரப்படுகின்றது.

உயிர் இருப்பதால்தான் உடல் அசைகின்றது என்று உணர்வதுபோல் கடவுள் இருப்பதால்தான் உலகம் இயங்குகிறது என்று நம்புதல் வேண்டும், கடவுளைக் காட்டு என்றால் உடம்புக்குள் இருக்கும் உயிரைக் காட்டு என்று கேளுங்கள். இறப்பு என்பது இவ்வுலகில் பிறந்தவர்களுடைய உடலோடு கூடப் பிறந்தது. இன்றோ அல்லது நூறு வயது முடிந்த பின்போ மரணம் நிச்சயம். எனவே நல்வினைகளைச் செய். எல்லா உயிர்களையும் தன்னைப் போலவே பார்க்க வேண்டும். உத்தமனது கோபம் ஒரு கணம்; மத்திமனது கோபம் இரண்டு மணி நேரம் அதர்மனது கோபம் இரவும் பகலும் சண்டாளனது கோபம் சாகும்வரை நிலைத்திருக்கும்.

## இன்று பரிசளிப்பு விழா

'தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வீட்டு வேளாண்மைப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான வடமராட்சிப் பிரதேச மட்ட பரிசளிப்பு விழா நாவற்குழி வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

## 'வேணாம்பா... கடவுளே! நாளைக்கே ஆட்சிமாறிட்டா?'

தமிழக வார இதழ் ஒன்றின் உரையாடல் பகுதியிலிருந்து சில சுவையானவை

★ டவுன் பஸ்ஸில் கண்டக்டரும், சற்று வயதான பெண்மணியும் ......

'ஏம்மா, பஸ்ஸில ஏறினதும் முன்னாலயே போய் உட்கார்ந்துட்டியே ...... டிக்கெட் எடுக்க வேணாம்?'

'ஆமாமா இடம் இருந்தச்சி உக்கார்ந்திட்டேன். அதுக்காக உங்க பக்கத்துல வந்தா நிக்க முடியும்?'

இப்ப இப்படிச் சொல்லுவே. இதையே இருபது வருஷத்துக்கு முன்னாடி இருந்தா சொல்லுவியா?

★ வடபழனி கோயிலருகே வீட்டுத்தரகர் ...

'பேசாம... அ.தி.மு.கவுல முக்கியமான பிரமுகர் இருக்கிற ஏரியாவா வீடு பார்த்துடவா? தண்ணி, கரண்ட், ரோடு வசதியெல்லாம் பிரமாதமா இருக்கும். என்ன கமிஷன் கொஞ்சம் அதிகம் தரணும்'

'வேணாம்பா கடவுளே! நாளைக்கே ஆட்சி மாறிட்டா, அந்த ஏரியாவுலதான் முதல்ல எல்லா வசதியையும் 'கட்' பண்ணுவாங்க வேணும்னா முக்கியமான கார்டு ஹோல்டர் இருக்கிற ஏரியாவா பாரு! இந்த விஷயத்துல அவங்களுக்குத் தான் எந்த நேரத்துலயும் செல்வாக்கு ஜாஸ்தி'

★ தைப்பொங்கல் அன்று டவுன் பஸ் ஒன்றில்...

'யோவ்... கரும்பை அது பஸ்ஸில கரும்ப நீட்டியே வைச்சுருக்கிறது? மடக்கி வைச்சுக்கோ... இல்லேன்னா இறங்குய்யா'

'ஏம்பா... கண்டக்டரு இன்னிக்குத் தைப்பொங்கலு, பஸ்ஸில கொஞ்சம் அப்படி இப்படின்னுதான் இருக்கும். நீதாம்பா அட்ஜஸ்ட் பண்ணிப் போகணும்.'

'ஆமாய்யா இன்னிக்குத் தைப்பொங்கலுன்னு கரும்பைத் தூக்கிட்டு வருவீங்க, கண்டுக்காம விட்டா நாளைக்கு மாட்டுப் பொங்கலுன்னு மாட்டையே பஸ்ஸில ஏத்திடுவீங்க ...... அதெல்லாம் முடியாது, இறங்கய்யா கீழே!

★ அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ காலனி மார்க்கெட் அருகில் இரு பெண்கள்

'என்ன மீனியம்மா எலவச சேலை கொடுக்கறாங்களே நீ வாங்கிட்டியா?''

'அந்தக் கண்றாவிய ஏண்டி கேக்குற? எலவச சேலை வாங்கினதும் போதும், அந்தப் பாவிமக்க கூட்டத்தில என் இடுப்பில இருந்த சேலையை உருவிப் போட்டதும் போதும் இனிமே என் ஜென்மத்துக்கும் எலவசப் புடவைக்கு அலைய மாட்டேன்'

## சென். மைக்கல், பாடுமீன் அணிகள் வெற்றியீட்டின

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 'லீக்' முறையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில், நேற்று முன்தினம் சென் அந்தனீஸ் அளைவெட்டி மைதானத்தில் இடம் பெற்ற போட்டிகளில் ''பி'' பிரிவில் செல்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய பாஷையூர் சென் அந்தனீஸ் 'பி' அணியை 3 : 2 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

'ஏ' பிரிவு ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் 'ஏ' அணி, நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை 4 : 0 என்ற கோல் அடிப்படையில் வென்றது.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக பி.ஆர். தம்பிராஜா, ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரும் உதவி நடுவர்களாக ரீ. கருணாகரன், கே. நாகேந்திரன் கடமையாற்றினார்கள். 16

## வர்மா கமிஷன் காலஎல்லை மேலும் 3மாதங்கள் நீடிப்பு

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பான, பந்தோபஸ்து ஏற்பாட்டுக் குறைபாடுகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்டுள்ள உயர் நீதிமன்ற நீதிபதி வர்மா கமிசனின் கால எல்லை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கமிசன் கடந்த மே மாதம் நியமிக்கப்பட்டது.

## முள் படுக்கையில் சிறுவன் சாதனை

முள்படுக்கையின் மீது ஆனந்தமாக 800 மணி நேரம் படுத்து உலக சாதனைபுரிந்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளான் இங்கிலாந்தைச் சேர்ந்த மிக்கெல லோக்கொக் என்ற சிறுவன்.

இந்த முள்படுக்கை 6 அடி நீளமுள்ள 4800 ஆணிகளைக் கொண்டிருந்தது.

## நாளை ஔவையார் விழா

சுந்தர்மடம் ஆதிகூடி அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் ஔவையார் விழா எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (நாளை) காலை ஆரம்பமாகின்றது.

தங்கா தாந்தி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பண்டிதர் இ. பொன்னம்பலவாணர் திரு. க. சிவராமலிங்கம், சைவப்புலவர் கா. இ. துரைத்தினம் உட்பட பலர் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

பட்டிமன்றமும் வில்லிசையும் இடம் பெறவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## சூரியனுக்கு கோயில்

தமிழ்நாட்டில் சூரியபகவானுக்கு ஒன்பது இடங்களில் தனியாகக் கோயில் கட்டியிருக்கிறார்கள். திருவிடைமருதூருக்கு அருகே சூரியனார் கோயில் என்று ஓர் இடம் இருக்கிறது இந்தியாவில் முதல் சூரியன் கோயில் கோனார்க் என்ற இடத்தில் ஏற்பட்டது.

# புதிய உலக ஒழுங்கு

--- நரசிம்மராவ்

(இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் அமெரிக்காவில் உள்ள உலகப் பொருளாதார மன்றத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது.)

உலகெங்கிலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் துரித மாற்றங்கள் ஐ. நா பாதுகாப்புச்சபையின் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட உலகத் தலைவர்களுடைய கவனத்தை ஈர்த்திருக்கும் இந்த மாற்றங்கள் பற்றி எங்களது உடம் கருத்தும், நிலைப்பாடும் வேறுபட்டதாக அமையலாம். சர்வதேச உறவுகளில் உருவாகியுள்ள இந்தப் புதிய ஒழுங்கு பற்றி மாறுபட்ட கருத்துக்களை நாம் கொண்டிருக்கலாம். இருப்பினும் இந்தப் புதிய மாற்றங்களால் உருவாகும் சவால்களைச் சமாளிப்பதற்கு நாம் எல்லோரும் சர்வதேசரீதியில் ஐக்கியப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச அமைதியையும், சமாதானத்தையும் பேணுவதில் ஐ நா சபை அதிக பங்களிப்பு செய்ய வேண்டும் என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளோம். இதன் உண்மையான அர்த்தமென்னவெனில் சர்வதேச அரங்கில் அதிக ஒத்துழைப்பு நிலவ வேண்டும் என்பதாகும்.

இன்று உலகில் பெரும் பொருளாதாரப் போட்டி நிலவுகின்ற அதேவேளை நாடுகளுக்கிடையில் அதிக ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது;

சர்வதேச அரங்கில் தோன்றிவரும் மாற்றங்கள் சாதக பாதக விளைவுகளை உருவாக்க வல்லன]

## சர்வதேச நிலைப்பாடு

உலகில் தற்போது நிகழும் மாற்றங்கள் சாதக விளைவுகளையும், அதேவேளை பாதக விளைவுகளையும் தோற்றுவிக்கக் கூடியதாக அமைந்துள்ளன.

### சாதக விளைவுகள்:

(அ) பகைமை உணர்வு கொண்ட இரு இராணுவ கூட்டு அமைப்புகள் உலகை அணு அழிவுக்கு இட்டுச் செல்லும் என்ற அச்சம் இப்போது குறைந்துள்ளது.

(ஆ) பிராந்திய பிரச்சினைகளில் கிழக்கு-மேற்கு நாடுகளிடையே நிலவிய பகைமையுணர்வு காரணமாக அவை செய்த தலையீடும்; நெருக்குதல்களும் பனிப்போரின் முடிவினால் அற்றுப்போய் நிலைமை மாறியுள்ளது.

(இ) உலகம் பூராவும் நடந்துள்ள மக்களின் மாபெரும் எழுச்சி ஜனநாயகத்தைத் தோற்றுவித்து மக்கள் பிரதிநிதிகள் ஆட்சிய அரசை உலகிலுள்ள பெரும்பான்மையான மக்களுக்குச் சொந்தத்துள்ளது. இந்த வகையில் ஜனநாயகமானது கட்டாயமாக ஏற்க வேண்டிய ஒன்றாக மட்டும் இன்றி சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. கடந்த பல சகாப்தங்களை பின் நோக்கிப் பார்க்கும்போது இந்த மாற்றம் மிக நீண்ட காலத்தின் பின்பே ஏற்பட்டுள்ளதென்பதை உணரலாம்.

(ஈ) உலக நாடுகளுக்கு ஒரு புதிய, அதுவும் சரித்திர பூர்வமான சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது. சர்வதேச உறவில் சுதந்திரமான, தடையற்ற சூழ்நிலையில் ஒரு புதிய அமைப்பை உருவாக்கக் கிடைத்த சந்தர்ப்பமே அதுவாகும். மனித சமுதாயத்தின் தேவைகளுக்கமைய, சமதர்மமான, ஜனநாயகக் கோட்பாடுகளுடன் கூடிய ஒரு அமைப்பைத் தோற்றுவிக்க இப்போது ஏதுவாகின்றது. ஐ. நா. வின் பங்களிப்புடன் ஒரு உண்மையான, விசுவாசமான கூட்டுப் பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் தோன்றியுள்ளது.

### பாதக விளைவுகள்:

(அ) இரு இராணுவக் கூட்டமைப்புகளிடையே பகைமையுணர்வும், பனிப்போரும் அகன்ற பின்பு கூட அணு ஆயுதங்களும் பேரழிவை ஏற்படுத்தும் பிற ஆயுதங்களும் இன்றும் பெரும் தொகையில் உள்ளன. இந்த ஆயுதங்கள் தொடர்ந்தும் ஒரு சில நாடுகள் வசம் இருக்கச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆயுதங்கள் குறிப்பிட்ட நாடுகள், தம்மைப் பாதுகாப்பதற்கென நியாயப்படுத்தப்படுகின்றது. தம்மைக் காத்துக் கொள்வதற்காக இப்படியான ஆயுதங்களை வைத்திருத்தல் வேண்டும் என்ற கருத்துத் தவறானது. மாறாக அது எதிர்விளைவுகளைக் காலப்போக்கில் உருவாக்கும். மேலும் இது கிழக்கு மேற்கும் பனிப்போருக்குப் பதில் வடக்குத் தெற்கு மோதலாக உருவெடுக்க வழிவகுக்கும். இது நிகழாதவாறு நாம் எச்சரிக்கையாக இருக்கல் வேண்டும்

(ஆ) சோவியத் யூனியனின் சிதைவானது உலகின் பல பாகங்களிலும் தேசிய உணர்வலைகளைத் தட்டியெழுப்பியுள்ளது. ஜனநாயக ஆட்சி இல்லாத நாடுகளிலேயே இது அதிகம் இடம்பெற்றுள்ளது. பல நாடுகள் உருவாகியுள்ள இச்சந்தர்ப்பத்தில் நெருக்கடிகள் தணிந்துள்ளமையின் அது ஜனநாயகத்தின் செயற்திறனையே சுட்டிக்காட்டுகின்றது. இந்த நாடுகளில் அரசியல் ஸ்திரமற்ற நிலையையோ, பொருளாதார நெருக்கடிகளையோ தோற்றுவிக்கும் விதத்தில் குழப்பத்தை ஏற்படுத்தாது உலகம் தவிர்த்துள்ளது.

(இ) பழைய சித்தாந்தங்களுக்குப் பதிலாக வேறுபட்ட சூழ்நிலைகளுக்கு ஒத்துவரக் கூடிய முன்னேற்பாடுடைய புதிய சித்தாந்த மாதிரிகளை எங்கள் மனதில் செலுத்தக் கூடிய அபாயம் இருக்கின்றது. சந்தைப்படுத்தும் கொள்கைகளில் கூடிய பங்களிப்பு தேவை என்பதனை ஒத்துக் கொள்கின்றோம். முதலீடு செய்வதற்குச் சிறந்த சூழ்நிலை இருக்க வேண்டிய அதேவேளை பொருளாதாரச் செயற்பாடுகளுக்குக் குறைந்த கட்டுப்பாடுகள் இருத்தல் நலம் இருப்பினும் வறுமை தாண்டவமாடும் நாடுகள் பொருளாதாரத்துறையில் தீர்மானங்கள் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அந்தப் பொறுப்பில் இருந்து அந்த நாடுகள் விடுபட முடியாது அடிப்படையில் குறைந்த சமூக நலன்களையாவது தம் மக்களுக்கு அந்த நாடுகள் கொடுக்க வேண்டிய கடமைப்பாட்டில் உள்ளன. நாடுகளுக்கிடையே கலாசார வேறுபாடுகளும் உள்ளன.

எங்கள் சமுதாயத்தில் தனி மனித முக்கியத்துவம் நிலவும் அதேவேளை சமுதாய நலனிலும் அக்கறை உணர்வுகள் இருக்கத்தான் செய்கின்றன இந்தியாவைப் பொறுத்தவரை கூட்டுக் குடும்ப அமைப்பு, சமுதாயம், கிராம மட்டம் ஆகியன மிக முக்கியமான அம்சங்கள்.

இவை பின்னடைவுள்ள நாட்டின் குணாதிசயங்கள் எனக் கருதப்படினும் உண்மையில் அப்படியானதல்ல. நிலைமைகள் வேறுபட்டவை எனவே பொருளாதார செயற்பாடுகளையும் சமூக மேம்பாட்டுக் கொள்கைகளையும் நாடுகள் தாமே தீர்மானிக்க அனுமதிக்க வேண்டும், சர்வதேச ஜனநாயக மரபுக்கேற்பபொருளாதார நடவடிக்கைகளில் மாற்றம் செய்யும்போது நாடுகளில் நிலவும் தனித்துவமான சமூக பொருளாதாரத் திட்டங்களையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) உலகெங்கும் புதிய ஜனநாயக அலைகள் தோன்றி, சர்வதேச நெருக்கடியும் குறைந்துள்ள இவ்வேளையில் போதுமான அளவு நாம் அபிவிருத்தியில் கவனம் செலுத்தாவிடில் இந்தச் சூழ்நிலை தொடர்ந்தும் நிலைக்காது எனவே இந்த விடயத்தில் நாம் அக்கறை செலுத்துதல் வேண்டும். பொருளாதாரச் சீர்குலைவினால் மக்கள் அதிருப்தி அடையும்போது அடக்குமுறை ஆட்சி ஏற்படுகின்றது.

சொத்துடமையற்ற நிர்க்கதியிலுள்ளவர்களே பாஸிசவாதிகளாக மாறுகிறார்கள் ஜனநாயக உணர்வானது, சர்வதேச மட்டத்திலான ஓர் அபிலாஷையாகும் இதைத் தக்கவைக்க வேண்டுமாயின் பலமான மற்றும் நிலையான அரசியல் அமைப்புகள் தேவை.

பொருளாதார நெருக்கடியும், சமூகப்பிரச்சினைகளும் அப்படியான அமைப்புகளை உருவாக்கக் கூடிய சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கா எனவே ஜனநாயகத்தைத் தக்க வைப்பதற்கு அபிவிருத்தி ஒரு முன் நிபந்தனையாக அமைகிறது. ஜனநாயக நாடுகள் என்ற வகையில் எமது நலன்களுறுதி சர்வதேச ஒத்துழைப்பில் அபிவிருத்தியை மையமாக வைத்துச் செயற்பட வேண்டும்.

ஜனநாயகத்துடன் அபிவிருத்தியும் தானாகவே வந்தடையும் என்ற அனுமானத்தை வைத்துக் கொள்ளக் கூடாது. ஜனநாயகத்துடன் அபிவிருத்தியும் இணைய வேண்டும். அப்படி இணைவதற்கு மன உறுதியுடன் திட்டம் வகுத்துச் செயற்பட வேண்டும்.

அப்படிச் செய்தால் மட்டுமே ஜனநாயகம் நிலைத்து நிற்கும்.

## மன்னன் மரணத்துக்காக மரணித்த தொழிலாளர்

இத்தாலியில் ரோம் நகரத்தில் 121 அடி உயரமுள்ள செஸ்டியஸ் பிரமிட் இருக்கிறது. இந்தக் கூம்புக்கோபுரத்தை ஜயஸ் செஸ்டியஸ் என்ற மன்னன் தனது நினைவுச் சின்னமாகத் தான் இறந்த பிறகு அதிலேயே தன்னைப் புதைக்க வேண்டும் என்று கட்டினான், ஓராண்டுக்குள் அவன் இறந்து விடுவான் என்று அந்தப் பிரமிட்டை 330 நாட்களில் கட்டி முடிக்கும்படி பணித்தான்.

பணியாட்களை அடிமைகளாக்கி அடித்துத் துன்புறுத்தி இரவும் பகலும் ஓய்வு ஒழிவின்றி உழைக்கச் செய்தான். அதைக் கட்டி முடிப்பதற்குள் அந்த மன்னன் இறக்கவில்லை. அந்தக் கோபுரத்தைக் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த பல பணியாட்கள் பசி, பட்டினி, தூக்கமின்மை, அதிக உழைப்பு ஆகியவற்றால் இறந்தனர்.

## ஆட்டை, மாட்டைக் கடித்து... எம். ஜி. ஆரையே "கடிக்கும்...

முதலமைச்சர் ஜெயலலிதா சட்டசபை விவாதத்தின் போது ஒரு கட்டத்தில் மறைந்த முதலமைச்சர், புரட்சித் தலைவர் எம். ஜி ஆரையே தாக்கும் வகையில் பேசினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசியப் பொருள்களின் விலையுயர்வைக் கட்டுப்படுத்த அரசுக்கு வாயில்லை என்று உறுப்பினர்கள் குற்றம் சுமத்திய போது முதலமைச்சர் எழுந்து எம். ஜி ஆர் கட்சியில்கள், சாராயக் கடைகள் இருந்ததால் அப்போது நிதிப்பற்றாக்குறையில்லை இப்போது நாங்கள் வந்து சாராயக் கடைகளை மூடி விட்டதால் அந்த நிதிப்பற்றாக்குறையைச் சமாளிக்க விலை ஏற்ற வேண்டியது அவசியமாகிறது என்று கூறினார் எனத் தமிழகத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனையே கடித்த கதைதான் ஜெயலலிதாவின் தற்போதைய போக்கு என்று அரசியல் அவதானிகள் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 'அப்போ... நான் வர்றேம்மா'

ஆளுநர் பங்கு பற்றிய வைபவம் ஒன்றில் வைத்து முதல்வர் ஜெயலலிதா வாழப்பாடி ராமமூர்த்தியை கண்டு கொள்ளவில்லை. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர் பாலசுப்பிரமணியத்துடன் நீண்ட நேரம் பேசினார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பாலசுப்பிரமணியம் நகர்ந்த பிறகு ஒரு இராணுவ அதிகாரியின் மனைவியை வலிய அழைத்துப் பேசிய ஜெயலலிதா அருகிலிருந்த வாழப்பாடியைப் புறக்கணித்திருக்கிறார் அப்போ... நான் வர்றேம்மா... நாளைக்குப் பார்க்கலாம் என்று சொல்லிப் புறப்பட்டாராம் வாழப்பாடி.

## செய்தி உலகம்

### பிரேசில்

'மிகுயல் ஹார்ட்டாடோ'' என்பவர் ஒரு 75 வயது ஏழை விவசாயி இவர் இப்போது ரியோ நகரத்தில் ஒரு ''பொப்'' மியூசிக் குழுவை ஏற்படுத்தி இருக்கிறார் இதில் ஆச்சரியம் என்னவென்றால் இந்தக் குழுவில் உள்ள அனைவருமே 60 வயதிற்கு மேற்பட்டவர்கள். முன்பு இளைஞர்களின் பொப் மியூசிக் குழு பெற்று இருந்த வரவேற்பைவிடப் பன் மடங்கு வரவேற்பு இக் குழுவிற்கு பொதுமக்களிடையே, பிரதானமாக ரீன் ஏச் காரர்களிடம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ரஷ்யா

ரஷ்யாவில் ஓடும் 'நரோவா' ஆற்றின் படுக்கையை தொல்பொருள் ஆராய்ச்சிக் குழுவினர் ஆராய்ச்சி செய்தார்கள். ஆராய்ச்சியில் இந்த ஆற்றில் இரு கரைகளிலும் மலைக் கோட்டைகள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பண்டைக் காலத்தில் இந்தப் பகுதியில் போர் நடத்தியிருப்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன, இந்தப் பகுதியில் கிடந்த பீரங்கிக் கப்பல் ஒன்று 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள் இப்போது இந்தக் கோட்டைகளுக்கும், இந்தக் கப்பலுக்கும் என்ன தொடர்பு என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

### அமெரிக்கா

அமெரிக்கன் மெடிக்கல் அசோசியேஷன், அமெரிக்கன் ஹார்ட் அசோசியேஷன் ஆகியவற்றின் யோசனையால் தற்போது புகையிலை போன்றவை சேராத சிகரெட்டுக்கள் தயாரிக்க ஆரம்பித்துள்ளனர். இந்த சிகரெட்டுகளில் 'நிக்கொடின்' இல்லாததால் இந்தவகைச் சிகரெட்டுகள் அதிகம் விற்பனையாகின்றன. இதில் 1000 சிகரெட்டுகள் குடித்தாலும் ஒரு நிக்கொடின் உள்ள சிகரெட்டால் ஏற்படும் கெடுதல்கூட வராது இந்தப் புதுவகை சிகரெட் இந்த ஆண்டு இறுதிக்குள் உலகின் மற்றைய பகுதிகளிலும் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (16)

# உணவுப் பொருள்களுக்கு நெடுந்தீவில் பற்றாக்குறை

நெடுந்தீவில் இராணுவம் முகாமிடாத போதிலும் இராணுவத்தினால் சுற்று வளைக்கப்பட்ட நிலையில் நெடுந்தீவு மக்கள் பீதியுடன் வாழ்வதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. கப்பல் சேவையும் இல்லை.

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இருமாத காலமாகக் கப்பலில் பொருள்கள் வந்து சேராததால் அங்கு உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடேற்பட்டுள்ளதுடன் நெடுந்தீவு மக்கள் பட்டினிலை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் நெடுந்தீவுக்குப் பொருள்களை அனுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. (14)

## 6 பேர் இதுவரை மரணம்

# மண்டைதீவில் சிக்கியுள்ள 38 பேரின் விவரம்

மண்டைதீவில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளவர்களின் பெயர்களும் உரிய மருத்துவ வசதியின்றி இறந்தவர்களின்பெயர்களும் வருமாறு அங்குள்ளவர்களின் பெயர்கள்

தி. விசாலாட்சி, தி. வீரசிகாமணி, தி. லெட்சுமியம்மா, தி. இராமலிங்கம், ச பொன்னுத்துரை, க, பரமானந்தம், எஸ். பொன்னுச்சாமி, க. சிவசம்பு, க. சிவனடியார், சி. திலம்மா, க. கந்தையா, க. தங்கச்சியம்மா, க நடேசபிள்ளை கா. சின்னத்துரை, இ காசுபதி, பொ. நாகலிங்கம், கு. செல்லையா, செ. தவலெட்சுமி, நா, சண்முகநாதன், ச,ஓங்காரரூபி, ச.சத்திய லெட்சுமி (கந்தர் மடம்) எஸ். பூங்காவனம், எஸ். குலசேகரம், க. விநாயகமூர்த்தி, ட. லோகேஸ்வரன் கா. நடராசா (ஐயா). ஏ. ஞானாம்பிகை, சி. சின்னத்தம்பி. வி. சிவசரணம், க. சிவப்பிரகாசம் (ஆசிரியர்) ச கந்தசாமி, சி. திலகவதி, வை இராசம்மா செ. நாகபூரணம் க தில்லைவனம், செ. சீதா லெட்சுமி க, பாக்கிய லெட்சுமி, சிவைத்திதற்போது வேலணைக்குச்சென்று விட்டார்

இறந்தவர்களின்பெயர்

சா, அமிர்தலிங்கம் (ஆசிரியர்) அ. மரகதமணி, க, பவளம்மா, இ. கனகசுந்தரம் (ஆசிரியர்) சி, நாகலெட்சுமி, வே நவரெட்ணம்

# தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் நியாயமானதே

## - ஆசிரியர் சங்கம் கருத்து

யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர்களினால் மாவட்ட திணைக்களத்தின் முன்னால் செய்யப்பட்ட மறியற் போராட்டம் நியாயமானதும் நீதியானதும் மிக அவசியமானதும் ஆகும்

இப் போராட்டத்தை மத்திய அரசோ அல்லது மாவட்டத்திணைக்களமோ அலட்சியம் செய்து கொச்சைப்படுத்துமானால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் அதன் அங்கத்தவர்களும் வெறுமனே பார்த்துக் கொண்டு இராது அவர்களின் எதிர்காலப் போராட்டங்களில் முழுமையாக பங்கெடுத்துக் கொள்வார்கள் எனச் சங்கத்தின் பொதுச் செயலாளர் த மகாசிவம் தெரிவித்தார்

இப்போராட்டம் பாடசாலை வகுப்புக்களை எவ்விதத்திலும் பாதிக்காது திணைக்களச் செயற்பாட்டை மட்டும்தடை செய்துள்ளது இதன் மூலம் சர்வதேச அரங்கிற்கு ஸ்ரீலங்கா அரசின் தமிழர் மீதான பாரபட்சமான நடவடிக்கை வெளிக்கொணரப்படுகின்றது

இது கல்வியைச் சீரழித்துவிட்டதென எவரும் கூறமுடியாது இதனால் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட முடியாமற் போய்விடுமென கல்விப்பணிப்பாளர் தெரிவித்தமை வருத்தத்திற்குரியது திணைக்களம் செயற்படாது தடுக்கப்படுமானால் ஆசிரியர்கள் மாத்திரமல்ல பணிப்பாளர் உட்பட சகல திணைக்கள ஊழியர்க்கும் சம்பளம் வழங்கமுடியாத நிலை ஏற்படும் என்பதைச் சகல தரப்பினரும் நன்குணர்ந்து கொண்டு தொண்டர் ஆசிரியர்களின் நீதியான நியாயமான கோரிக்கைக்குச் சுமுகமான முறையிற் தீர்வு காண முயல்வதே விவேகமானது எனவும் பொதுச் செயலாளர் கருத்துத் தெரிவித்தார்.

# தூய்மை நிறைந்த உள்ளமே இறைவன் வேண்டுவது

இறைவன் மக்களிடம் வேண்டுவது தூய்மை நிறைந்த உள்ளம். எனவே மக்கள் தமது உள்ளத்தை இறைவன் விரும்பும் அளவுக்குத் தூய்மை செய்தல் வேண்டும், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய நான்கும் அணுகாதவாறு வாழ்பவருடைய உள்ளம் இறைவனால் விரும்பப்படும். இதனையே சுவாமி விபுலாநந்தர் "உள்ளக் கமல மடி உத்தமனார் வேண்டுவது" என்று பாடினார்.

இவ்வாறு விபுலாநந்தர் சமயப் பணி பற்றி இவ்வாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடந்த விபுலாநந்தர் நூற்றாண்டு விழாவில் பேசிய சைவப் புலவர் செ, குணபாலசிங்கம் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில "உள்ளத்தைப் புனிதமாக்கும் முயற்சி பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்று இருக்கும் முயற்சி அன்று இளமைப் பருவத்திலிருந்தே தனது உள்ளத்தைப் புனிதமாக்கும் முயற்சியில் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும்" என்றார்,

திரு. நா. அரியபுத்திரன் தலைமையில்நடைபெற்ற இவ்விழாவில உரை அரங்கு கவி அரங்கு, கலை யரங்கு ஆகிய நான்கு பிரிவில நிகழ்ச்சிகள் வெகுசிறப்பாக நடைபெற்றன

### ★ யூனியன் கார்பைட் முன்னாள் தலைவரை

# ஒப்படைக்குமாறு கோருவதற்கு இந்தியாவிடம் அமெரிக்கா எச்சரிப்பு

இந்திய போபாலில் விஷவாயு கசிவு வழக்கு தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்ட அமெரிக்க யூனியன் கார்பைட் முன்னாள் தலைவர் அன்டர்சனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு இந்திய நீதிமன்றம் மீண்டும் கோரியுள்ளது.

எனினும் இந்தியா இவ்வாறு மீண்டும் மீண்டும் அன்டர்சனை கோருவது குறித்து அமெரிக்கா எச்சரித்துள்ளது,

இந்தியா இவ்வாறு மீண்டும் மீண்டும் கோருமானால் அமெரிக்கா இக்கோரிக்கையை பகிரங்கமாக நிராகரிக்கும் அறிக்கையை வெளியிடும் எனவும் இந்தியாவுடன் உறவும் பாதிக்கும் எனவும் அமெரிக்க சட்டவல்லுனர்கள் இந்தியாவிற்கு எச்சரித்துள்ளனர்

1984இல் இந்திய போபால் நகரில் உள்ள யூனியன் கார்பைட் இரசாயன ஆலையில் ஏற்பட்ட கசிவினால் நாலாயிரம் பேர் கொல்லப்பட்டனர்,

### ★ பங்களாதேஷில்

# கைது செய்யப்பட்ட 24 பேரை நீதிமன்றம் பிணையில் விடுத்தது

பங்களாதேஷில் இஸலாமிய கட்சியின் தலைவருக்கு எதிராக அங்கீகாரமற்ற வழக்கு விசாரணைநடாத்தப்பட்ட சம்பவத்தில கலந்து கொண்டதற்காக கைதுசெய்யப்பட்ட 24 பேரை பங்களாதேஷின் உயர்நீதி மன்றம் பிணையில் விடுதலைசெய்தது

இந்த 24 பேர் மேலும் தேசதுரோகம், சதி சட்டவிரோதமாகக் கூடியது ஆகிய குற்றங்கள் தாக்கல செய்யப்பட்டுள்ளது

அதிகாரிகள் நீதிபதிகளுக்குக் கொடுத்த நெருக்கடியின் பேரில தான் தமக்கு எதிரான கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக 24 பேரும் நீதிமன்றத்தில வாதாடினார்கள்

# வடமராட்சி இந்து மகளிர் சாம்பியன்

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் தேவரையாளி மைதானத்தில் நடைபெற்ற வலைப் பந்தாட்டப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி இரு அணிகள் சாம்பியன் கேடயத்தைப் பெற்றுக் கொண்டன.

நடைபெற்ற வலைப் பந்தாட்டப் போட்டித் தொடரில் 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட அணியில் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியும், 17, 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட அணிகளில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் சாம்பியன் ஆனது. 08

# டயானாவின் தந்தை மரணம்

பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் தந்தையார் ஸ்பென்ஸர்(68) நேற்று மரணமானார். இவர் மரணமான செய்தி அவுஸ்திரேலியாவில் பயணம் செய்து கொண்டிருக்கும் சார்ள்ஸ் டயானாவுக்கு அறிவிக்கப்பட்டது.

# யாழ். கிளை கண்டனம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் செயலாளரை தற்போதைய செயற்குழு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய செஞ்சிலுவைச்சங்க யாப்பிற்கு முரணானது என யாழ் கிளை பிரிவுக்கு தெரிவித்துள்ளது

இதனை தீர்மானிக்கும் பொறுப்பு பொதுச்சபைக்கே உண்டு எனவும் அது தெரிவித்துள்ளது 01

# மானிப்பாயில் கலைநிகழ்ச்சி

இன்று மாலை 7. 30 மணிக்கு மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் வலிகாமப்பிரிவினர் நடாத்தும் மாபெரும் கலை நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களின் உரைகளும்,தொடர்ந்து நாடகங்கள், பட்டிமன்றம், நாட்டிய நாடகங்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன

# நிகழ்ச்சி மாற்றம்

அன்னைபூபதி நினைவு தின நிகழ்ச்சிநாளை தென்மராட்சி இத்தாவில் முருகன் கோவிலில் நடைபெறும் முன்னதாக இந்நிகழ்ச்சி நாளைமறுதினம் நடைபெறவிருந்தது.

# சூடானிலிருந்து செஞ்சிலுவை வெளியேற்றப்படும்?

கிழக்கு ஆபிரிக்க நடான சூடானில் இருந்து சர்வதேச, செஞ்சிலுவைச்சங்கம் வெளியேற்றப்படும் என சூடான் அரசு எச்சரித்துள்ளது.

சூடானின் தெற்கிலுள்ள கிளர்ச்சியாளருக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவியளித்து வருவதாக குற்றஞ் சாட்டியே சூடான் அரசு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

# அளவு குறைந்த வலைகள் உபயோகிக்கத் தடை

குடாநாட்டு கடற்கரையை அண்டியுள்ள நீர்தேக்கங்களிலேலே மீன் இனங்கள் முட்டை இடுவது வழக்கம் முதிர்ச்சியடையும் முன்பே மீன்குஞ்சுகளை மீனவர்கள் சிறிய கண்கள் உள்ள வலைகளைப் பாவித்து பிடிப்பதினால் மீன் இனத்தின்விருத்தி குறைந்து பெரும் பாதிப்பு ஏற்படுகிறது.

எனவே இவ்வித நீர்த்தேக்கங்களில் பிரதானமாக தொண்டமான் ஆற்றுக் கடல் பகுதி நாவற்குழி பாலத்திற்கு அண்மையில பகுதி ஆகியவற்றின் மூக்கால் அங்குலத்திற்கு குறைந்த கண்களையுடைய வலைகளால் மீன் பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 16

# வடமராட்சியில் அன்னைபூபதி நினைவு உண்ணாவிரதம்

தியாகச் சுடர் அன்னை பூபதியின் நினைவு தினத்தை யொட்டி வடமராட்சி பகுதி எங்கும் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 3 ஆம் திகதி அச்சுவேலி மகாவித்தியாலயத்திலும் 9ஆம் திகதி புலோலி உபயகதிர்காமை ஆலயத்திலும் 14ஆம் திகதி கரவெட்டி கம்பியன் அரசடி சந்தியிலும் 17ஆம் திகதி வல்வெட்டித்துறை சிவன் கோயிலிலும் அடையாள உண்ணாவிரதத்தை பருத்தித்துறை. கரவெட்டி வட்டஅவைகளினால் நடாத்தப்படவுள்ளன,

இதன்போது அன்னைபூபதி பற்றிய வாழ்க்கை வரலாறு இந்திய இராணுவத்தின் கொடுமை தற்கால அரசியல் சூழ்நிலை பற்றி விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலரும் உரையாற்றவுள்ளனர்.

# சிக்கன கடன் வழங்கு சங்க சமாஜ பத்து ஆண்டு நிறைவுவிழா

யாழ் மாவட்டசிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் பத்தாவதாண்டு நிறைவுவிழா மே மாதம் விரிவான முறையில் கொண்டாடப்படவுள்ளது

இவ்விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, அங்கத்தவர்களுக்கான பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, நாடகம், கைவினை உணவு தயாரிப்புப் போட்டிகளும் வில்லுப்பாட்டு கிராமிய நடனம் குழுப்பாட்டு முதலிய கலைப் போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன

45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான வினாடி வினாப் போட்டியும் இடம் பெறவுள்ளது நிறைவு விழா மலரொன்றும் வெளியிட்டு வைக்கப்படும் போட்டிக்கான விண்ணப்பங்கள் அடுத்தமாதம் 7 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டுமென்று அறிக்கப்பட்டுள்ளது. 14

யாழ்—

இருந்து விலகிக் கொண்டனர்

இதனால் இததேர்தலில் போட்டியிட்ட பழைய நிர்வாகத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன் தலைவராகவும், திரு. ஜோஜ் இராஜேந்திரம் உபதலைவராகவும், திரு. சபாரத்தினம் சிவானந்தராசா செயலாளராகவும். திரு. குமாரசாமி சற்குணலிங்கம் பொருளாளராகவும் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டனர். 15, 19

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கன்னியங்காடு டச்சுவீதி'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 30-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது